| | | |
|---|---|---|
| **O.S No.** | : | 100/2011 |
| **DATE** | : | **17.11.2025** |
| **பெயர்** | : | **அன்பழகன்** |
| **தந்தை பெயர்** | : | |

**வாதி தரப்பு பி.வா. சா.2 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

4. இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி R.பாலமுருகனை எனக்கு தெரியும். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி ரத்தினகுமாரின் மகன் என்பதால் அவரை தெரியும். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியை தத்தெடுத்துள்ளார். 21.02.2003ல் கடலூர் பத்திர பதிவு அலுவலகத்தில் வைத்து மேற்படி தத்து ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. தத்து ஆவணம் எழுதப்பட்ட சமயத்தில் 2ம் பிரதிவாதி எங்கு இருந்தார் என்று எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியை நான் நேரில் பார்த்ததில்லை. தத்து சமயத்தில் 1 மற்றும் 2 பிரிதிவாதிகளின் வயது தெரியாது.

5. முருகேசன் என்பவரை தெரியும் அவர் காஞ்சிபுரத்தை சேர்ந்தவர். இந்த வழக்கில் மேற்படி முருகேசன் பதில் தாக்கல் செய்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. நான் எனது எதிருரையை 3ம் பிரதிவாதி முருகேசனுக்கும் சேர்த்து தான் தாக்கல் செய்துள்ளேன். உயிலில் 1ம் பிரதிவாதி ரத்தினகுமாருக்கு தற்போது ஆண் வாரிசுகள் இல்லை அவருக்கு ஆண் வாரிசுகள் ஏற்பட்டால் சொத்து அவர்களுக்கு சேரும் என்று எழுதப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதிக்கு பிறந்த ஆண் வாரிசுகள் கிடையாது. வா.சா.ஆ–1 அசல் உயில் ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. அதில் 1ம் பிரதிவாதிக்கு ஆண் வாரிசுகள் இல்லை என்றால் அவரது சகோதரர் தங்கதுரைக்கு செல்ல வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது.

**கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.